**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 04.08.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஷெல் புரோகிராமிங் குறித்த செயல்முறைப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தொழில்நுட்ப மையம் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தகவலியல் துறை சார்பில், "ஷெல் புரோகிராமிங்" (Shell Programming) குறித்த செயல்முறைப் பயிற்சி 03.08.2026 அன்று, உயிரித் தகவலியல் ஆய்வகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி, உயிரித் தகவலியல் மற்றும் உயிரித்தொழில்நுட்பத் துறைகளில் பயன்படுத்தப்படும் Linux கட்டளை வரி (Command Line), ஷெல் ஸ்கிரிப்டிங் மற்றும் கணினி வழி தானியக்க செயல்முறைகள் குறித்து மாணவர்களுக்கு செய்முறை அனுபவத்தை வழங்கும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

இப்பயிற்சியின் வளமுனைவராக திரு. அருள் குமார் பழனிசாமி, நிறுவனர் மற்றும் தலைமை தொழில்நுட்ப அலுவலர், ஆதிதி டிஜிட்டல், கணுவாய், கோயம்புத்தூர், கலந்து கொண்டு, Linux அடிப்படைகள், Shell Programming, கோப்பு மேலாண்மை, Script உருவாக்கம், செயல்முறை தானியக்கமாக்கல் மற்றும் உயிரித் தகவலியல் தரவுப் பகுப்பாய்வில் அவற்றின் பயன்பாடுகள் குறித்து மாணவர்களுக்கு செய்முறை விளக்கங்களுடன் பயிற்சி அளித்தார்.

நிகழ்ச்சிக்கு முனைவர் ஸ்ரீ. ஸ்ரீதேவி, பேராசிரியர் வரவேற்புரையாற்றி, உயிரித் தகவலியல் மற்றும் உயிரித்தொழில்நுட்பத் துறைகளில் ஷெல் நிரலாக்கத் திறன்களின் அவசியத்தை வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியின் நிறைவில், தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தொழில்நுட்ப மையத்தின் (CPMB&B) இயக்குநர் முனைவர் ந. செந்தில் மற்றும் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தகவலியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் லோ. அருள் ஆகியோர் பாராட்டுரை வழங்கி, பயனுள்ள தகவல்களையும் செய்முறை அனுபவத்தையும் ஒருங்கிணைத்த சிறப்பான பயிற்சியை

வழங்கிய வளமுனைவரின் பங்களிப்பை பாராட்டினர். மேலும், மாணவர்கள் எதிர்கால ஆராய்ச்சி மற்றும் தொழில்துறையின் தேவைகளை பூர்த்தி செய்ய கணினி மற்றும் நிரலாக்கத் திறன்களை தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினர்.

இச்செயல்முறைப் பயிற்சியில் மூன்றாம் ஆண்டு பி.டெக். உயிரித் தகவலியல் மற்றும் பி.டெக். (உயிரித்தொழில்நுட்ப மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். பயிற்சியின் மூலம் ஷெல் புரோகிராமிங் மற்றும் Linux அடிப்படையிலான கணினி செயல்முறைகள் குறித்த அவர்களின் செய்முறை அறிவும் தொழில்நுட்பத் திறனும் மேம்பட்டு, உயிரித் தகவலியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்துறை பயன்பாடுகளுக்குத் தேவையான திறன்களை அவர்கள் பெற்றனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**